Form: NC-03

கோப்பு இலக்கம் :.....

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையுடன் நீர் இணைப்பின் போது பாவனையாளர் இணையும் உடன்படிக்கை

1974 ஆம் ஆண்டு 2ம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை சட்டத்தில் மற்றும் 1992 ஆம் ஆண்டு 13ம் இலக்க திருத்தப்பட்ட சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு மற்றும் பின்னர் அரசாங்கத்தினால் அல்லது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் மூலம் பிறப்பிக்கப்படுகின்ற நிபந்தனைகளுக்கு இணங்குவதற்கும், ஏதாவது ஒரு காரணத்தினால் முன்வைக்கப்படுகின்ற நிபந்தனை மற்றும் வரி விதிப்புகளுக்கு இணங்ககுவதற்கு நான் மறுப்பின், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் தற்றுணிவுக்கு அமைவாக எந்த நிலையிலும், இந்நீர் இணைப்பு சேவையை துண்டிப்பதற்கு இணங்குவேன் என்பது பற்றி பூரண அறிவுடன் உள்ளேன் /உள்ளோம். மேலும் நிலுவை பணத்தொகையை அறவிட்டுக்கொள்வதற்கு நான்/நாங்கள்/தினணக்களம்/அமைச்சு/நிறுவனம்/க்கு எதிராக சட்டரீதியாக நடவடிக்கை எடுப்பதற்கு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு உரிமையுண்டு எனவும், அந்த சட்டரீதியான தீர்மானங்களுக்கு மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்க நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும்,..... குடியிருக்கும்..... ..... ஆகிய நான்/ நாங்கள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் மூலம் ..... என்ற இடத்திற்கு நீர் இனைப்பு ஒன்றினை பெற்றுக்கொள்வதற்கு சம்மதிக்கின்றேன்/சம்மதிக்கின்றோம்.

(மேற்கூறப்பட்ட சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள சில விதிமுறைகள் மற்றும் கட்டளைகளில் உள்ளீர்க்கப்பட்டுள்ள நிபந்தனைகள் மிக தெளிவாக கீழே குறித்துக்காட்டப்பட்டுள்ளது. ஆயினும் அவை முழுமையாக குறிப்பிடப்படாததுடன், பாவனையாளர்களின் வசதிக்காக மட்டுமே ஆகும்)

நீர் இணைப்பு சேவை தொடர்பான நிபந்தனைகள்

01. விநியோகிக்கப்படும் நீரை விரயமாக்குவது மற்றும் தேவையற்ற முறையில் பாவித்தல் போன்ற நடவடிக்கைகளை தவிர்க்கவும்.

02. நிர்மாணம் மற்றும் ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்படும் நீர் இணைப்பாயின் அது தற்காலிக நீர் இணைப்பாவதுடன், 6 மாத காலத்தில் குறித்த நீர் இணைப்பு துண்டிக்கப்படும் என்ற நிபந்தனைக்கு உட்படுவதனால், மீண்டும் நீர் இணைப்பு சேவை அவசியமாயின் புதிய உடன்படிக்கை ஒன்றின் மூலம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

03. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் பொது முகாமையாளரினால் நீர் வழங்கல் நடவடிக்கைகள் சம்பந்நமாக அதிகாரமளிக்கப்பட்டுள்ள அதிகாரிகளுக்கு சகல உள்ளக நீர்க்குழாய்கள் மற்றும் பொருத்தப்பட்டுள்ள உபகரணங்களை பரிசீலனை செய்து பார்ப்பதற்கான தேவை ஏற்படுமிடத்து எந்தவொரு நியாயமான நேரமாயினும் அதற்குரிய சகல வசதிகளையும் செய்து கொடுத்தல் வேண்டும்.

04. நீர் இணைப்புக்களை வழங்குவதற்குரிய, அரசாங்க சொத்தாகக் கருதப்படும் நீர் மானியின் பாவனைக்கு ஏற்புடையதான நீர் கட்டணத்தொகையை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் பொது முகாமையாளருக்கு செலுத்துதல் வேண்டும்.

05. நீர் இணைப்பினை வழங்குவதற்காக பிரதான குழாயிலிருந்து நீர் மானி வரை தேவைப்படக்கூடிய அனைத்து மூலப் பொருள்களுக்குமான செலவுகளை சபையினால் திட்டமிடப்படும் செலவு மதிப்பீட்டுடன் சேர்க்கப்படுவதுடன் இதற்காக பாவனையாளர்களினால் வழங்கப்படும் எந்தவொரு மூலப்பொருட்களும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. இம்மதிப்பீட்டிற்காக பாவனையாளர்கள் பணம் செலுத்தினாலும் அது சபைக்கு உரிய சொத்தாக கருதப்படும். வேறு பாவனையாளருக்கு நீர் இணைப்பினை வழங்குவதற்காக குறித்த உபகரணங்களை மற்றும் குழாய் வழியினைப் பயன்படுத்தும் உரிமை சபைக்குரியதாகும். ஆகவே சபை ஊழியர் தவிர்ந்த வேறு ஒருவர் எக்காரணத்திற்காகவும் அந்த உபகரணங்களுக்கு அல்லது குழாய் வழியிற்கு ஏதும் செய்தல் கூடாது.

06. மேற்குறிப்பிட்ட உபகரணம் அல்லது குழாய் இழப்பு, சேதம் அல்லது நஷ்டம் ஏற்படின் பாவனையாளர்கள் அது பற்றி சபைக்கு அறிவிக்க வேண்டியதுடன், அந்த நஷ்டம் உபகரண உற்பத்திப்பிழை காரணத்தினால் நிகழ்ந்துள்ள சந்தர்ப்பம் தவிர்ந்த அவ்வாறு சேதமடைந்த உபகரணத்தினை புதுப்பிப்பதற்கு அல்லது மீண்டும் இணைப்பதற்கு செலவாகக்கூடிய சகல செலவீனங்களையும் பாவனையாளர்கள் சபைக்கு செலுத்த வேண்டும்.

07. மானி வாசிப்பை பெற்றுக்கொள்வதற்காக வருகைதரும் மானி வாசிப்பாளருக்கு தனது கடமையை முறையாக ஆற்றுவதற்கு தேவையான வசதிகளை வழங்குதல் வேண்டும். ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் நீர் மானி செயலிழத்தல் அல்லது மானி வாசிப்பாளருக்கு மானி வாசிப்பதற்கு மானியிருக்கும் இடத்திற்கு போக முடியாதவிடத்து அல்லது ஏதாவது தவிர்க்க முடியாத காரணத்தினால் அல்லது மதிப்பீட்டுப் பட்டியலினை வழங்க வேண்டிய தேவை ஏற்படுமிடத்து சபையின் சட்ட விதிகளுக்கு அமைவாக மதிப்பீட்டுப்பட்டியல் ஒன்று தாங்களுக்கு வழங்கப்படும். அடிக்கடி மதிப்பீடு செய்யப்படும் இடங்களிலுள்ள மானி வாசிப்புக்களுக்குரிய வசதிகளை செய்து கொடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாயினும் அவ்வாறு உகந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லையாயின் அந்த நீரிணைப்பினை/இணைப்புக்களை துண்டிப்பதற்கான அதிகாரம் சபைக்கு உண்டு.

08. சபைக்குரிய நீர் மானியின் பின்னதாக பொறுத்தப்படும் நீர் குழாய் அல்லது உபகரணத்தினை பராமரிக்கின்ற பொறுப்பினை சபை ஏற்காது.

09. சபையின் மற்றைய பாவனையாளர்களுக்கு செயற்திறன் மிக்கதாக நீர் வழங்குவதற்கு இடையூறு ஏற்படுத்தக்கூடிய வகையில் முறையற்ற விதத்தில் விநியோகத்திற்கு இடைஞலாக இருத்தல் அல்லது அமுக்கத்தினை அதிகரிப்பதற்காக சபையின் குழாயிற்கு நீர்ப்பம்பியொன்றினை இனைத்தல் ஆகியவை குற்றமாகும். அவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமிடத்து குறித்த நீர் வழங்கல் சேவையை துண்டிப்பதற்கான அதிகாரம் சபைக்கு உண்டு. அத்துடன் அதன் நிமித்தம் சபையினால் விதிக்கப்படுகின்ற அபராதத்திற்கும் உட்பட வேண்டி ஏற்படும்.

10. பல்வேறுபட்ட கட்டண அறவிடல் முறைகளின் அடிப்படையில் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள நீர் இணைப்பு சேவையை அதிகூடிய கட்டண அறவீட்டு முறைமையை உடையதாக நடைமுறையில் இருக்கும் எவ்விடயத்திற்கும் பாவனையாளரினால் பயன்படுத்தப்படலாகாது. யாராவதொரு பாவனையாளரது நீர் வழங்கல் சேவையை அதிகூடிய கட்டண அறவீட்டு முறைமைக்கு உட்படும் வகையில் மாற்றப்படுமாயின் சபையின் தீர்மானத்திற்கு அமைவாக அவ்வாறான அதிகூடிய கட்டண அறவீட்டு முறைமையிற்கு உட்படும் தினத்திலிருந்து குறித்த அறவிடல் முறைப்படி நீர்க்கட்டணத்தை செலுத்துவதற்கு பாவனையாளர் இணைவர். அத்துடன். அதன் நிமித்தம் சபையினால் விதிக்கப்படுகின்ற அபராதத்திற்கும் உட்பட வேண்டி ஏற்படும்.

11. நீரிணைப்பிற்காக செலுத்தப்பட வேண்டிய தொகை சம்பந்தமாக கட்டணப் பற்றுச்சீடு/ குறுஞ் செய்தி (SMS) ஊடாக அறிவிக்கப்படுமிடத்து அத்தொகையை செலுத்துவது அவசியமாவதுடன், குறித்த தொகையை நீர்ப்பட்டியல் வழங்கப்பட்ட திகதி முதல் 30 நாட்களுக்குள் முழுமையாக செலுத்தாதவிடத்து அல்லது இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விநியோக நிபந்தனைகள் ஏதேனும் மீறப்படுமிடத்து குறித்த நீரிணைப்பினை துண்டிப்பதற்கான உரிமை சபைக்கு உண்டு. இந்த நீரிணைப்பிற்கு மேலதிகமாக வேறு நீரிணைப்புக்கள் காணப்படுமிடத்து அவற்றைத் துண்டித்ததன் பின்னர் அல்லது முன்னதாக செலுத்தப்படாது நிலுவை தொகை காணப்படின் இந்த நீரிணைப்புக்கு உரிய கணக்கில் அல்லது குறித்த இடத்திற்குரிய பிறிதொரு கணக்கில் நிலுவை தொகை இல்லாதிருப்பினும் செலுத்தாது காணப்பட்ட நிலுவைத் தொகையை பற்று வைத்ததன் பின்னர் குறித்த நீரிணைப்புகளை துண்டிப்பதற்கான அதிகாரம் சபைக்கு உண்டு.

12. நீர் பாவனையாளர் வீட்டின் உரிமையாளாராக அல்லது பிறிதொரு நபராக இருப்பினும் துண்டிக்கப்பட்ட நீரிணைப்பபினை மீண்டும் வழங்குவதாயின் அவ்வாறு செய்வதற்கு முற்படுவது அதற்காக செலவாகக்கூடிய சகல செலவீனங்கள் மற்றும் மிகுதிக் கட்டணங்கள் அனைத்தும் பாவனையாளரினால் செலுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டதன் பின்னர் ஆகும்.

13. சபையினால் தனக்கு வழங்கப்பட்டுள்ள நீரிணைப்பினை பாவனையாரரின் மூலம் முறையற்ற விதத்தில் பாவிப்பதற்கு மற்றும் வழங்கப்பட்டுள்ள நீரிணைப்பின் ஒரு பகுதியினை வேறு ஒருவருக்கு வழங்குதல் அல்லது விற்பனை செய்தல் ஆகியவை தண்டனைக்குரிய குற்றமாகும். இதன் போது சபையின் நடைமுறைக்கு அமைவாக அபராதத் தொகை அறவிடப்படும்.

14. தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக தனக்கு வழங்கப்பட்டுள்ள நீரிணைப்பினை துண்டித்துக்கொள்வதற்கு பாவனையாளருக்கு வேண்டுமாயின் அவ்விடயத்தினை ஒரு வாரத்திற்கு முன் எழுத்து மூலம் அறிவிக்க வேண்டியதுடன் நீர் வழங்கல் சேவை துண்டிக்கப்படும் திகதி வரைக்குரிய நீர் கட்டணத்தினை பாவனையாளர் செலுத்துதல் வேண்டும்.

15. நீர்ப்பட்டியலுக்குரிய கட்டணத்தொகையானது முறையாக செலுத்தப்படாதுள்ள சந்தர்ப்பமொன்றின் போது நீரிணைப்பினை துண்டிப்பதற்கான அறிவித்தலை நீர்ப்பட்டியலிலேயே அச்சிட்டு அல்லது தபாலினுடாக அல்லது அந்த இடத்தில் ஒட்டியோ உரிய பாவனையாளருக்கு அறிவித்து நீரிணைப்பினை துண்டிக்கும் சந்தர்ப்பத்தில் ஏற்புடைய நபர்கள் உள்ளபோது/இல்லாத போது நீரிணைப்பினை மானியிலிருந்து/பிரதான குழாயிலிருந்து துண்டித்தல் அல்லது தேவையாயின் பொலிஸ் சகிதம் உரிய வளாகத்திற்குச் சென்று நீரிணைப்பினை துண்டிப்பதற்கான உரிமை சபைக்கு உண்டு.

16. பிரதான காணியை பகுதிகளாகப் பிரித்து, புதிய மதிப்பீட்டு வரி இலக்கம் வழங்கப்படும் சந்தர்ப்பங்களில் உரிமையாளரினால் புதிய மதிப்பீட்டு வரி இலக்கங்களை மற்றும் புதிய உரிமையாளர்களின் விபரங்களை சபைக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும். அவ்வாறு செய்யத் தவறுமிடத்து, தாங்கள் அனைத்துப் பொறுப்புகளிலிருந்தும் விடுபடமாட்டீர். பிரதான இடம் அல்லது பின்னதாக பிரிக்கப்பட்ட ஒரு பகுதி பிறிதொருவருக்கு உரித்துடையதாக்கியதன் பின்னர் பிரதான இடத்திலிருந்து சபைக்கு செலுத்தப்பட வேண்டிய நிலுவைத்தொகை காணப்படுமிடத்து அந்நிலுவைத் தொகையை செலுத்துவதற்கான கடப்பாடு தாங்களுக்கு உண்டு என்பது பற்றி அறிந்திருத்தல் அவசியமாகும்.

17. குறித்த நீரினைப்பு வழங்கப்பட்டுள்ள காணிப்பகுதி பிறிதொரு நபருக்கு விற்பனை செய்யப்படுமிடத்து புதிய உரிமையாளரினால் பிணைத்தொகை செலுத்தப்பட்டதன் பின்னர் புதிய ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட வேண்டியதுடன் அவ்வாறு செய்யாதவிடத்து குறித்த நீர் வழங்கல் சேவையை துண்டிப்பதற்கான உரிமை சபைக்கு உண்டு. அவ்வாறே கொள்வனவு செய்யும் போது நீர் இணைப்பிற்கு உரியதாக நிலுவை தொகை காணப்படின் குறித்த மொத்த நிலுவைத் தொகையையும் செலுத்த வேண்டும்.

18. நீரிணைப்பு சேவையை நீர் மானியிலிருந்து துண்டித்ததன் பின்னர் அதை பிரதான குழாயிலிருந்து துண்டிப்பதற்கான உரிமை சபைக்கு உண்டு. மேலும் நீரிணைப்பு துண்டிக்கப்பட்டு 365 நாட்களில் மீண்டும் நீரிணைப்பினை பெற்றுக்கொள்ளாத போதும் பின்னர் குறித்த நீரிணைப்பானது மீண்டும் தமக்கு தேவைப்படுமிடத்து அது தொடர்பாக பதிவுத் தபாலின் மூலம் துண்டிக்கப்பட்டு 365 நாட்களுக்குள் அறிவித்தல் வேண்டும். கணக்கினை செல்லுபடியற்றதாக்கியதன் பின்னர் மீண்டும் நீர் இணைப்பு சேவை வேண்டுமாயின் புதிய நீரிணைப்பிற்கான கட்டணம் மற்றும் முன்னைய கணக்கிற்குரிய நிலுவைத்தொகையையும் செலுத்தி குழாய் இணைப்பினை பெற்றுக்கொள்ள வேண்டும்.

19. பகிரங்க அறிவித்தல் ஒன்றின் மூலம் அல்லது பாவனையாளருக்கு எழுத்து மூலம் அறிவித்தலின் பின்னர் நீரிணைப்பு தொடர்பாக மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளில் சில அல்லது அறவிடல் முறையினடிப்படையிலான கட்டணத்தை காலத்திற்கு காலம் திருத்தியமைப்பதற்கு அல்லது மாற்றம் செய்வதற்கு சபைக்கு முடியும். அவ்வாறான திருத்தங்கள் அல்லது மாற்றங்கள் சம்பந்தமாக குறித்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்.

20. சபையின் நீர் விநியோகக் குழாயிலிருந்து நீர் மானிவரையான நீர்க்குழாய் அமைப்பு தடைப்படும் விதத்தில் அல்லது சுயவிருப்பத்தில் அல்லது ஏதாவது சட்டரீதியான காரணத்தினால் தடைப்படுமாயின் அந்நீரிணைப்பினை துண்டிப்பதற்கான அதிகாரம் சபைக்கு உண்டு.

21. குத்தகைக்கார் ஒருவரினால்/வாடகை குடியிருப்பாளரினால் நீர் இணைப்பினை பெற்றுக்கொண்டுள்ள சந்தர்ப்பத்தில் குறித்த காலம் முடிந்ததன் பின்னர். அவ்விடயம் சம்பந்தமாக நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு அறிவித்து குறித்த நீர் இணைப்பினை துண்டித்துக்கொள்வதற்கு அல்லது சொத்து உரிமையாளரின் பெயருக்கு நீர் இணைப்பை மாற்றுவதற்கான நடவடிக்கைகளை குத்தகைகாரர்/வாடகை குடியிருப்பாளர் மேற்கொள்ள வேண்டியதுடன், அவ்வாறில்லாத சந்தர்ப்பங்களில் குத்தகைகாரர்/வாடகை குடியிருப்பாளர் குறித்த நீர் இணைப்பிற்கான பொறுப்புதாரர் ஆவர்.

22. வளாகத்திற்கு பெற்றுக்கொள்ளப்படுகின்ற பிரதான நீர் விநியோகத்தின் ஊடாக வெவ்வேறான மானி பொருத்தப்பட்ட தனி உப நீரிணைப்புக்களை கோருமிடத்து குறிப்பிட்டதொரு காலப்பகுதியினுள் பிரதான மானியில் குறிப்பிடப்பட்டுள்ள பாவனை மற்றும் உப மானிகளில் குறிப்பிடப்பட்டுள்ள பதிவாகியுள்ள பாவனையின் மொத்த அளவுக்கிடையே பற்றாக்குறை காணப்படுமிடத்து, அப்பாவனை சார்ந்த பற்றாக்குறையை உப மானிகளுக்குரிய கணக்குகளுக்கு விகிதாசார அடிப்படையில் உட்புகுத்தி குறித்த கட்டணத்தை செலுத்துவதற்கு அல்லது குறித்த பாவனை சார்ந்த பற்றாக்குறைக்கு உரிய கட்டணத்தை தனியானதொரு கணக்கின் கீழ் செலுத்துவதற்கும் அவ்வாறான கட்டணங்களை செலுத்துவதை புறக்கணித்துள்ள சந்தர்ப்பங்களின் போது உப நீர் மானிகளுக்குரிய நிலுவைத் தொகையை செலுத்தியுள்ளதாயினும் பிரதான நீர் விநியோகத்தை துண்டிப்பதற்கு உட்படும் என்பது சம்பந்தமான தெளிவினைப் பெற்றிருப்பதற்கும்,

23. சபையின் நீர் விநியோகத் தொகுதியின் முறையான செயற்பாடு சம்பந்தமாக பரிசீலனை செய்தல் அல்லது பிறிதொரு அவசர பழுதுபார்ப்பு நடவடிக்கை அல்லது வேறு ஏதாவதொரு நடவடிக்கைகளின் பொருட்டு நீர் விநியோகத்தை தற்காலிகமாக நிறுத்துவதற்கான அதிகாரம் சபைக்கு உள்ளதுடன், அதனால் ஏதாவது இழப்பு ஏற்படுமாயின் அதற்கு பொறுப்புக்கூற வேண்டிய கடப்பாடு சபைக்கு இல்லை. முடியுமான எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சபையினால் குறித்த தற்காலிக நீர் வெட்டு சம்பந்தமாக பாவனையாளர்களுக்கு முன்னதாக அறிவிக்கப்படும். இதன் போது முகம்கொடுக்க நேரிடும் அசௌகரியங்களை குறைத்துக்கொள்வதற்கு நீர் சேமிப்பு தொட்டி ஒன்றினை பராமரிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

24. நீரிணைப்பினை பெற்றுக்கொள்கின்ற போது சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள் மற்றும் அனைத்து விபரங்களையும் சரியாகவும், உண்மையாகவும் சமர்ப்பிப்பதற்கு கடமைப்பட்டுள்ளேன், அத்தகவல்கள் ஏதேனும் பொய்யானதென்றோ அல்லது பிழையானதென்றோ பின்னர் உறுதி செய்யப்படுமாயின் இந்த நீரிணைப்பினை பிரதான குழாயிலிருந்து துண்டிப்பதற்கான உரிமை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு உண்டு. துண்டித்தல் காரணமாக எனக்கு/எங்களுக்கு ஏற்படத்தக்க இழப்பிற்கு சபை பொறுப்புக்கூறாது.

25. மாதாந்த மானி வாசிப்பை பெற்றுக்கொண்டதன் பின்னர் மாதாந்த பட்டியல் மற்றும் அனைத்து அறிவிப்புகளும் தங்களினால் வழங்கப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தி (SMS) மூலம் அனுப்பப்படுவதுடன், அதற்கான கொடுப்பனவுகளை 30 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டும். மேலும், தங்களினால் சபைக்கு வழங்கப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்தில் மாற்றம் ஏற்படுமிடத்து அதை புதுப்பிப்பது தங்களது பொறுப்பாகும். அவ்வாறு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாத போது நீர் இணைப்பு துண்டிக்கப்பட்டால் தங்களது கவனக்குறைவே அதற்குரிய காரணமாகும் என்பதை கருத்திற்கொள்ள வேண்டும்.

..... ஆகிய நான்/நாங்கள் மேற்கண்ட நிபந்தனைகள் அனைத்தையும் வாசித்து புரிந்து கொண்டதாகவும், அக்காரணிகள் சகலவும் மற்றும் அவ்வப்போது விதிக்கப்படும் நிபந்தனைகளை கடைபிடிப்பதற்கும் இணங்குவதாக இத்தால் உமக்கு அறியத்தருகின்றேன்/அறியத்தருகின்றோம்.

வீடு:
முழுப் பெயர்:……..……
முகவரி:……..……
உரிமையாளர்/குத்தகைதாரர்/ வாடகை குடியிருப்பாளர் என்பது
சம்பந்தமாக:…….……
தேசிய அடையாள அட்டை இலக்கம்: …….....
கையொப்பம்:…….....
திகதி:…….....

வீடு அல்லாத:
வியாபாரம்/நிறுவனம்/அரசாங்க நிறுவனம்/கூட்டு வியாபாரம் பெயர்:……..……..
முகவரி:……..……..
வியாபாரமாயின் உரிமையாளரின்/ நிறுவனமாயின் பணிப்பாளரின்/ அரசாங்க நிறுவனமாயின் அதன் தலைவரின் அல்லது அதிகாரம் பெற்றவர்களின் (பதவி முத்திரையைப் பதிக்கவும்)

1. முழுப் பெயர்:…….

   தேசிய அடையாள அட்டை இலக்கம்: ……..……
   கையொப்பம்:……
   திகதி:……

2. முழுப் பெயர்:……..……

   தேசிய அடையாள அட்டை இலக்கம்: ……...

கையொப்பம்:……..……
   திகதி:……

(சபையின் அதிகாரியொருவரின் முன்னிலையில் கையொப்பமிடவில்லையாயின் பின்வரும் பகுதியை பூர்த்தி செய்யவும்)

சாட்சியாளர்கள் (2- இருவர்)

1. முழுப் பெயர்:…….……
   தேசிய அடையாள அட்டை இலக்கம்: …….
   கையொப்பம்:……..…….

திகதி:……

2. முழுப் பெயர்:……..……..…….

   தேசிய அடையாள அட்டை இலக்கம்: ……..……

கையொப்பம்:……..…….

திகதி:……..…

20…… ……. மாதம் …… ஆம் திகதி என் முன்னிலையில் சத்தியம் செய்யப்பட்டது/உறுதி மொழியப்பட்டது.

……
சத்திய ஆணையாளர்/ சமாதான நீதவானின் கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை

சபையின் அதிகாரமுடைய அதிகாரியின் பெயர்:……

……. ……. ……. …….
கையொப்பம் தேசிய அடையாள அட்டை இலக்கம் திகதி உத்தியோகபூர்வ முத்திரை

பொதுவான ஆலோசனைகள்

1. மாதாந்த நீர்ப்பட்டியலை மின்னஞ்சல் (Email) மூலம் பெற்றுக்கொள்ளுமிடத்து தங்களினால் வழங்கப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு எம்மால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள தானியங்கி மின்னஞ்சல் செய்தியை "accept" செய்ததன் பின்னரே அது கணினி அமைப்பிற்கு உள்ளிடப்படும்.

2. தங்களது நீர் வழங்கல் தொடர்பான அனைத்து விசாரணைகள் மற்றும் பாவனையாளர் முறைப்பாடுகள் "1939" என்ற கட்டணமற்ற இலக்கத்தின் ஊடாக தெரிவிக்கப்பட வேண்டும்.